**STARTING TIME 12.57 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 207/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 06.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **செல்வம்** Father's Name :

Address :

Calling : Age :

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

14. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1–ம் பிரதிவாதியால் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த W.P.No.14770/2017 என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவின் இணைய நகல் என்றால், சரிதான். அந்த உத்தரவு நகல் **வா.சா.ஆ.12**–ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15. வா.சா.ஆ.12 வழக்கில் எனது மனைவியான 1–ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் தான் 3–ம் நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.12 உத்தரவில், எனது மனைவி கிரயம் பெற்ற தனிப்பட்ட சொத்தினை பொறுத்து அவர் உரிமையியல் நீதிமன்றத்தில் தான் அணுக வேண்டும் என்றும், எனது மனைவியின் தனிப்பட்ட சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பினை பொறுத்து நீதிப்பேராணை மனுவில் முடிவு செய்ய இயலாது என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

16. வாதியால் கட்டப்பட்டு அவரால் மேற்படி கீதா மற்றும் குப்பன்

எனபவர்களின் அனுபவத்திற்கு விட்டுள்ள கட்டுமானங்கள் முழுவதும் 1–ம் பிரதிவாதியால் கிரயம் பெற்ற இடத்தில் தான் வருகிறது என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் வா.சா.ஆ.12 உத்தரவினை நான் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால், சரியல்ல.

17. 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் 14–வது பத்தியில் கமலம்மாள் மற்றும் குடும்பத்தினரின் பயனுக்காக பட்டா ஒப்படைவு செய்ய வேண்டி விண்ணப்பித்த காரணத்தினால் தான் அவர் பெயருக்கு பட்டா ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். பட்டா ஒப்படைவானது கமலம்மாள் பெயரில் மட்டும் வழங்கப்பட்டிருந்தாலும், அந்த சொத்தினை கமலம்மாள் மற்றும் கமலம்மாளின் மகன்கள் மற்றும் மகள்கள் கூட்டு சொத்தாக அனுபவிக்க கமலம்மாள் சம்மதத்தின் பேரில் அனைவரும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால், சரியல்ல, கமலம்மாள் அவரது காலம் வரை அவர் அனுபவித்து வந்தார், அவரது காலத்திற்கு பிறகு கமலம்மாளின் மகள்கள் அனுபவித்து வருகிறார்கள்.

18. 1–ம் பிரதிவாதி கிரயம் பெற்ற வா.சா.ஆ.10 கிரயப் பத்திரத்தை 1–ம் பிரதிவாதி பெயருக்கு அவரது தாயார் கமலம்மாள் மற்றும் கமலம்மாளின் இதர வாரிசுகளான 2 முதல 5 வரையான பிரதிவாதிகள் சேர்ந்து எழுதிக் கொடுத்ததாக உள்ளது என்றால், சரிதான். 1–ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து கமலம்மாளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால், அதை அவர் மட்டுமே கிரயம் செய்திருப்பார் என்றும், மாறாக கமலம்மாளின் வாரிசுகள் அனைவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் வாதியை மட்டும் விட்டுவிட்டு 2 முதல் 5 வரையான பிரதிவாதிகளும், கமலம்மாளும் மட்டும் வா.சா.ஆ.10 கிரயப் பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால், சரியல்ல.

19. வா.சா.ஆ.10 கிரயப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தில், கிரய சொத்தானது கமலம்மாளுக்கு பிதுராஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என

சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

20. வா.சா.ஆ.10 கிரயப் பத்திரத்தில் உள்ள சொத்து D.C. நிலம் என்பதால் EX.X.1 அரசாணையின்படி அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி அந்த சொத்தை விற்பனை செய்ய முடியாது என்ற காரணத்தினால் தான் வா.சா.ஆ.10 கிரயப் பத்திரத்தில் உள்ள சொத்து கமலாம்மாளின் பிதுராஜ்ஜித சொத்து என பொய்யாக சொல்லப்பட்டு 1–ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

21. EX.X.1 அரசாணை உள்ள விவரம் கமலாம்மாளுக்கோ, வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தில் உள்ள இதர கிரயதாரர்களுக்கோ தெரியாது என்று 1–ம் பிரதிவாதி அவரது பதிலுரையிலோ அல்லது நான் எனது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால், சரிதான்.

22. 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் 16–வது பத்தியில் கடந்த 1982–ம் ஆண்டு கமலம்மாள் 3 அறைகளுடன் ஒரு கூரை வீடு கட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த கூரை வீடு வா.சா.ஆ.10 கிரய சொத்து அமைந்துள்ளது என்றால், சரியல்ல, மீதியுள்ள 21 செண்டில் தான் அந்த கூரை வீடு உள்ளது. அந்த கூரை வீட்டை வாதி தான் கட்டினார் என்றால், சரியல்ல.

23. வா.சா.ஆ.12–ல் எனது மனைவி கிரயம் பெற்ற தனிப்பட்ட சொத்தில் தான் 3–ம் நபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கில் சொல்லிவிட்டு தற்போது மாற்றி வழக்கிற்காக வேண்டி பின் யோசனையுடன் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அந்த கூரை வீடானது வா.சா.ஆ.10 கிரயப் பத்திரத்தில் உள்ள சொத்தில் தான் வருகிறது என்றும், ஆனால் அந்த கூரை வீட்டை கிரயப் பத்திரத்தில் குறிப்பிட்டு மதிப்பிடாமல், முத்திரை தீர்வை குறைத்துக் காட்டி ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் அந்த கிரயப் பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால், சரியல்ல, அந்த கிரயப் பத்திரம் எழுதிய சமயத்தில் கிரய

சொத்து காலி இடமாக தான் இருந்தது, அதில் கூரை வீடு எதுவும் இல்லை, எனவே கிரயப் பத்திரத்தில் கூரை வீடு எதுவும் காட்டவில்லை.

24. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில், வா.சா.ஆ.10 கிரயப் பத்திரத்தில் உள்ள சொத்தில் கூரை வீடு இருப்பதை மறைத்து பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு சொல்லியும், அதை 1–ம் பிரதிவாதியின் பதிலுரையிலோ அல்லது எனது முதல் விசாரணை சாட்சியத்திலோ மறுத்து எதையும் நான் சொல்லவில்லை என்றால், சரிதான்.

25. தாவா சொத்தை கமலம்மாள், அவரது மகன்கள் மற்றும் மகள்களுடன் கூட்டு சொத்தாக பாவித்து அனுபவித்து வந்தார்கள் என்றும், அவ்வாறான நிலையில் வாதியின் சம்மதமின்றியும், வாதிக்கு தெரியாமலும் 1–ம் பிரதிவாதியின் பெயருக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.10 கிரயப் பத்திரம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால், சரியல்ல.

26. 1983–ம் ஆண்டு 3–ம் பிரதிவாதி B.S.N.L. நிறுவனத்தில் அரசுப் பணியில் இருந்தார் என்றால், சரிதான். அதே போல் கமலம்மாளின் கணவர் ரயில்வேயில் பணிபுரிந்து வந்து கடந்த 1982–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காலமாகிவிட்டதால், அதன் பிறகு 1982–ம் ஆண்டில் இருந்தே கமலம்மாள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்தார் என்றால், சரிதான்.

27. 1–ம் பிரதிவாதியின் பதிலுரையிலும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் கமலம்மாள், பண உதவி இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தார் என்றும், அப்போது அவருக்கு வாதியோ, 2, 3 பிரதிவாதிகள் எவ்வித பண உதவியும் செய்யவில்லை என்று எதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

28. என்ன காரணத்திற்காக வேண்டி 1–ம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ.10 கிரயப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், தாவா சொத்தினை வீட்டு மனைகளாக மாற்ற நடவடிக்கை எடுத்தபோது அதில் ஆக்கிமிப்பு இருந்ததால்,

கமலம்மாள், 2 முதல் 5 வரை பிரதிவாதிகள் வா.சா.ஆ.10 கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள்.

29. கமலம்மாள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்ததாலும், 2, 3 பிரதிவாதிகள் அரசு பணியில் இருந்ததாலும், வாதி வெளிநாட்டில் வேலை செய்து வந்ததாலும், கமலம்மாள் உட்பட அவரது வாரிசுகளுக்கும் குடும்ப கடன் எதுவும் இல்லை என்றும், ஆனால் குடும்ப கடன் இருந்ததாக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு வா.சா.ஆ.10 கிரயப் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் கிரயப் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

30. அதேபோல் வா.சா.ஆ.10 கிரயப் பத்திரம் பிரதிபலன் செலுத்தாமல் பதிவு செய்யப்பட்டுள்ள வகையில் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. வா.சா.ஆ.10 கிரய பத்திரத்தின் பேரில் எவ்வளவு தொகை கிரய தொகையாக கொடுக்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை, கிரயம் பெற்ற 1–ம் பிரதிவாதிக்கு தான் தெரியும். வா.சா.ஆ.10 கிரயப் பத்திரம் நடைமுறைக்கே வரவில்லை என்பதாலும், ஆக்கிரமிப்பினை அகற்ற உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யாததாலும், கிரயப் பத்திரத்தின் பேரில் கிரய சொத்தின் அனுபவம் தற்போது வரை 1–ம் பிரதவாதி வசம் இல்லாததாலும் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

31. 1–ம் பிரதிவாதி பெயரில் கொடுத்த பட்டாவை ரத்து செய்ய வேண்டி வாதி கொடுத்த மனுவின் பேரில் பட்டாவை ரத்து செய்ய வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனுவினை 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்தாரா என்றால், இல்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 01.58 P.M.**

YUVARAJ Digitally signed by YUVARAJ Date: 2025.08.06 16:48:09 +0530